12 பாடம்

# இரவில் பாடிய தூதர்கள்

*நீ ஆசைப்பட்ட ஏதோ ஒன்றிற்காக அதிகமாக ஜெபித்திருக்கிறாயா? அதைப் பெற ஆர்வமாகக் காத்திருந்தது உண்டா? நீ விரும்பியது கிடைத்தபோது உனக்கு எப்படியிருந்தது? சில மேய்ப்பர்கள் பெற்ற அத்தகைய அனுபவத்தை இப்போது பார்ப்போமா?*

இரவில் விண்மீன்கள் மின்னிக்கொண்டிருந்தன. சந்திரனும் வானத்தில் அழகாகப் பவனி வந்துகொண்டிருந்தது.

அந்த வயல்வெளியின் அருகே சில மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளை மடக்கியிருந்தார்கள்.

பகலில் நன்றாக மேய்ந்திருந்த ஆடுகள் இரவில் உறங்கிக்கொண்டிருந்தன.

தங்கள் ஆடுகளுக்கு காட்டு விலங்குகளால் தீங்கு நேராதபடி அருமையாகக் காத்து இரவில் அவை ஓய்வெடுக்கவும் வழி செய்திருந்தனர். இப்படிப் பகல் முழுவதும் உழைத்தவர்கள் கண் அயர்ந்து தூங்கவில்லை.

பயபக்தியும் தேவனின் மேல் பாசமும் கொண்ட மேய்ப்பர்கள் மேசியாவின் வருகை யைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மேசியாவை விரைவில் எதிர்பார்த்து அவர்கள் உள்ளம் ஏங்கியது. அந்த இரவு நேரம் அமைதியாக இருந்தது.

அப்போது திடீரென்று வானில் பேரொளி தோன்றியது. கண்களைக் கூசவைக்கும் அளவிற்கு பெரிய வெளிச்சம் வானில் தெரிந்தது. அந்த வெளிச்சம் மேலும்மேலும் அதிகமாகிக் கொண்டேயிருந்தது.



மேய்ப்பர்கள் திடுக்கிட்டு துள்ளி எழுந்தனர். வானத்தை உற்று நோக்கினர். பயத்தால் நிறைந்த வேளையில் கனீரென்று ஒரு குரல் கேட்டது.

“பயப்படாதீர்கள்” என்ற ஓர் அன்பான, கனிவுமிக்க குரல் ஒலித்தது. தொடர்ந்து

**மனன வசனம்**

**பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். கர்த்தராகிய கிறிஸ்து எனும் இரட்சகர் ... பிறந்திருக்கிறார். லூக்கா 2:10,11.**

தேவதூதன் பேசினார். "இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்.

"பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; அந்தக் குழந்தைதான் மேசியா என்பதற்கு இதுவே அடையாளம்" என்று தூதன் சொன்னான்.

அவ்வாறு தூதன் இயேசுவின் பிறப்பைக் குறித்துச் சொன்ன மாத்திரத்தில், அதைத் தொடர்ந்து ஏராளமான தூதர்கள் வானில் ஒன்றாகக் கூடிப் பாடல் பாடினார்கள்.

"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும் மனுஷர்கள்மேல் பிரியமும் உண்டாவதாக" என்று பாடி தேவனைத் துதித்தார்கள்.

அவ்வாறு அருமையான இனிமையான தேவகானம் பாடியபின்னர் தேவதூதர்கள் யாவரும் பரலோகம் சென்றுவிட்டார்கள்.

மிகுந்த ஆச்சரியத்துடனே இந்த நிகழ்வுகளையெல்லாம் தூதர்கள் பார்த்துக்கொண்டே நின்றார்கள்.

பகலெல்லாம் உழைத்துக் களைத்துப் போயிருந்த மேய்ப்பர்கள் தூங்கவேண்டுமென்று ஆசைப்படவில்லை. தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தவர்கள் தங்கள் மந்தையையும் பெரிதாக நினைக்கவில்லை.

தாங்கள் இதுவரையிலும் மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த மேசியாவைக் காண்பதையே



## செய்தி

**தேவன் நமக்குச் சந்தோஷத்தைத் தருகிறார்.**

முக்கியமாக நினைத்தார்கள். எனவே, "எழுந்து, பெத்லகேம் சென்று, மேசியாவைப் பார்ப்போம்" என்று சொல்லிக் கொண்டே புறப்பட்டார்கள். இரவில் கையில் சிறிய விளக்குடன் தட்டுத்தடுமாறி மேசியாவைக் காணும் ஆவலால் விரைந்து சென்றார்கள்.

தேவதூதன் சொன்னபடி பெத்லகேமில் குழந்தையாய்ப் பிறந்திருந்த மேசியாவாம் இயேசுவைக் கண்டு பேரானந்தம் அடைந்தார்கள்.

என் கண்மணியே! இயேசுவைக் காணச்சென்ற மேய்ப்பர்களைப்போல நீயும் இயேசுவைக் காண ஆசைப் படுகிறாயா?

ஆசைப்படு.
நீ ஆசைப்பட்டால்,
இயேசுவைக் காணலாம்.
சந்தோஷமும் பெறலாம்.

**செய்முறை:** *தேவன் உனக்குத் தருவது இங்கே சொல்லப்பட்டுள்ளது. அது என்ன என்பதைக் கண்டறிய கீழே கொடுக்கப்பட்டுள்ள தீய குணங்களை எல்லாம் வெட்டிவிடு. மீதமுள்ள சொற்களைக் கோட்டில் எழுதுக. பதில் கிடைக்கும்*

**கோபம் இயேசு பொறாமை எனக்குச் சந்தேகம் சந்தோஷம் பெருமை தருகிறார் குறைகூறல்.**

**புதிர் 12**

______________________

______________________

______________________

______________________